சார்பு நீதிமன்றம், குளித்தலை

O.S.No. **01/2016**

பெயர்: கனகா 21.09.2021

<u>3 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எனக்கு 4 குழந்தைகள். எனது மூத்த மகன் அவருக்கு திருமணம் ஆகிவிட்டது. அவருக்கு சுமார் 30 வயதிருக்கும். எனக்கு 45 வயதாகிறது. எனது வயதைக் காட்டக்கூடிய ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. எனக்கு 65 வயதிற்கு மேலாகிறது என்றும், நான் வழக்கிற்காக என் வயதை குறைத்து சொல்கிறேன் என்றும் சொன்னால்சரியல்ல. எனது அப்பா வீரப்பன் 1988 ல் இறந்துப்போனார். எனது அம்மா பாப்பா எனதுதகப்பானாருக்கு முன்பே காலமாகிவிட்டார். எனது அப்பாவிற்கு 2 ஆண் பிள்ளைகள். சிவந்தலிங்கம், பெரியசாமி. பெண்பிள்ளைகள் 5 பெயர் - காமாட்சி, சின்னப்பொண்ணு, காளியம்மாள், கனகா, விமலா. எனது இரண்டு அண்ணன்களும் இறந்துவிட்டார். எனது தங்கை விமலா இறந்துவிட்டார். சிவந்தலிங்கம் மனைவி பெயர் மாரியாயி, மகன் பெயர் செந்தில். பெரியசாமியின் மனைவி பெயர் வளர்மதி, பிள்ளைகள் - மோகன், சந்திரசேகரன், செல்வேந்திரன், பாரதிதாசன். 5ம் வாதி விமலா இறந்த பிறகு அவரது கணவரையும் பிள்ளைகளையும் இந்த வழக்கில் 6 முதல் 9 வாதிகளாக சேர்த்துள்ளோம். 4 அயிட்டசொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளோம். எனது அப்பாவின்அப்பா பெயர் பெரியண்ணன். தாவா 1 முதல் 4 சொத்துக்கள் எனது அப்பா, பாட்டனார் பெயரில் இருப்பதைக் காட்டக்கூடிய ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். தாவா 1, 2 அயிட்டசொத்துக்கள் இரயில்வே சொத்து என்றும், அவற்றிற்கு வருவாய்த்துறையில் மோசடியாக ஆவணம் பெற்றுள்ளேன் என்றால்சரியல்ல. தாவா 3ம் அயிட்ட சொத்திற்கு எனது அப்பா பெயரில் எந்த ஆவணமும்இல்லை என்றால்சரியல்ல. தாவா 3ம் அயிட்ட சொத்து எனது அண்ணன்கள் சிவந்தலிங்கம் பெரியசாமி குடியிருந்து வந்து அதனடிப்படையில் பட்டா பெற்றுள்ளார்கள் என்றால்சரியல்ல. தாவா 5ம் அயிட்ட சொத்திற்கு எனது அப்பா பெயரிலோ பாட்டனார் பெயரிலோ எந்தவித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால்சரியல்ல. தாவா 5 ம் அயிட்ட சொத்து அரசு புறம்போக்குதான் அதை நாங்கள் பயன்படுத்தி வருகிறோம். அரசு புறம்போக்கை அரசாங்கம் தேவைப்பட்டால் எடுத்துக்கொள்ளலாம் என்றால் சரிதான். தாவா 4 ம் அயிட்ட சொத்து கூட்டுக்குடும்பமாக எனது அண்ணன்கள் மற்றும் எனது அப்பா சேர்ந்து வாங்கிய சொத்து என்றால்சரிதான். நான் எந்த வருடம் பிறந்தேன் என்று எனக்கு ஞாபகமில்லை. 1975 ம் வருடம்நவம்பர் மாதம்

04ம்தேதி எனது அப்பாவும் எனது சகோதரரும் சேர்ந்து தாவா 4ம் அயிட்ட சொத்தைபொறுத்து ஒரு ஈட்டுக்கடன் பத்திரம் பொன்னுசாமி என்பவருக்கு எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி ஈட்டுக்கடனில் ஏற்பட்ட கடனை எனது சகோதரர்கள் தான் தீர்த்தார்கள்தான் என்றால் சரியல்ல.

ஒம்/கனகா,

ஒம்/M.சண்முககனி,
சார்பு நீதிபதி,
குளித்தலை.